**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 24.06.2025

**அசல் வழக்கு எண். 154/2009**

**வா.சா.** 1. – **ஜானகிராமன் , த/பெ.வாசுதேவன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

தற்போது நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் என்றால் நான் வேளச்சேரியில் வசிக்கிறேன் பழைய எண் **26,** புதிய எண் **6,** நேரு தெரு, ராஜீவ் காந்தி நகர் வேளச்சேரி**,** சென்னை **42** இல் வசித்து வருகிறேன்**.** உங்கள் தாத்தா ராகவபிள்ளை எப்பொழுது இறந்தார் என்றால் **2003**இல் இறந்தார்**.** அவருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் ஆவார் அவர்கள் முறையே வாசுதேவன், செல்லம்மாள்**,** ராஜகோபால், முனியம்மாள் ஆகிய நான்கு பிள்ளைகள் ஆவார்கள்**.** உங்கள் தாத்தா ராகவ பிள்ளை இறக்கும் பொழுது நீங்கள் வேளச்சேரி முகவரியில் தான் இருந்தோம் உங்கள் தாயார் பெயர் என்ன என்றால் பட்டம்மாள் ஆவார்**.** இந்த வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் நானும் என் அம்மாவும் மூத்த சகோதரியும் சேர்ந்து தாக்கல் செய்தோம்**.** எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் என்னுடைய தாத்தா சொத்தில் என் அப்பாவிற்கு வர வேண்டிய பாகம் எங்களுக்கு தேவைப்படுகிறது ஆகவே பாகப்பிரிவினை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம்**.**நீங்கள் நீங்கள் எவ்வளவு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என் தாத்தாவிற்கு நான்கு வாரிசுகள்**.** என் அப்பாவிற்கு சேர வேண்டிய நாலில் ஒரு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்**.** வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் இருங்காட்டு கோட்டை மற்றும் பென்னலூர் என்ற கிராமத்தில் உள்ளது**.** எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு பரப்பளவு சொத்து உள்ளது தெரியுமா என்றால் அந்த விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேன் என்னால் தற்பொழுது குறிப்பிட்டு சொல்ல முடியாது**.** உங்கள் தாத்தா ராகவப்பிள்ளை வழக்கு சொத்தினை சுயமாக சம்பாதித்து வாங்கியது என்றால் சரியில்லை**.**உங்கள் தாத்தா ராகவ பிள்ளை இறந்த பொழுது அப்பாவிற்கு என்ன வயது என்றால் தாத்தா இறப்பதற்கு முன்பாகவே அப்பா இறந்து விட்டார்**.** உங்கள் அப்பா இறக்கும்பொழுது அவருடைய வயது என்ன என்றால் சுமார் **50** இருக்கும்**.** உங்கள் தாத்தாவின் மனைவி அலமேலு உயிருடன் உள்ளாரா என்றால் அவர் இறந்து விட்டார்**.** அலமேலு எப்பொழுது இறந்தார் என்றால் எங்கள் தாத்தா இறந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் இறந்து விட்டார்**.** வழக்கு தாக்கல் செய்யும் பொழுது நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்களா அல்லது வேலைக்கு சென்று கொண்டிருந்தீர்களா என்று நான் வேலைக்கு தான் சென்று கொண்டிருந்தேன்**.** வழக்கில் சொல்லிய சொத்துக்கள் தவிர உங்கள் தாத்தா ராகவா

பிள்ளைக்கு வேறு ஏதேனும் சொத்துக்கள் உள்ளதா என்றால் முன்பு இருந்தது ஆனால் அவர் இறக்கும்போது அந்த சொத்துக்கள் அவர் பெயரில் இல்லை. சொத்துக்கள் இருந்ததாக சொல்கிறீர்கள் அது எங்கு இருந்தது சொல்ல முடியுமா என்றால் அது திருப்பாச்சூர் என்ற கிராமத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்தது. இந்த வழக்கில் அந்த சொத்தைப்பற்றி சொல்ல முடியவில்லை என்றால் அவருடைய பெயரில் அந்த சொத்து தற்போது இல்லை என்பதால் வழக்கில் சொல்லவில்லை. தாத்தா கையொப்பம் போடுவாரா அல்லது கைநாட்டு வைப்பாரா என்றால் கைநாட்டு தான் வைப்பார். தாத்தா உயிருடன் இருக்கும் போது அடிக்கடி சென்று பார்ப்பீர்களா என்றால் அடிக்கடி சென்று பார்ப்போம் அவரும் வருவார். தாத்தா இறக்கும்போது நீங்கள் உடன் இல்லை என்றால் அந்த நேரத்தில் இல்லை. தாத்தா இறக்கும் பொழுது எங்கு இருந்தீர்கள் என்றால் வேளச்சேரி முகவரியில் தான் இருந்தோம். உங்கள் தாத்தா இறந்தபோது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் **85** வயது இருக்கும். இறக்கும் வரை நினைவுடன் தான் இருந்தார் என்றால் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தார். காலையில் ஒரு மாதிரியும் சாயந்திரம் ஒரு மாதிரியும் இருப்பார். நீங்கள் அடிக்கடி சென்று பார்த்ததாக கூறுகிறீர்கள் அவருக்கு வைத்தியம் பார்த்தீர்களா என்றால் அழைத்துச் சென்றுள்ளேன். உங்கள் அம்மா பட்டம்மாளை கூட்டு குடும்ப சொத்தில் ஒரு தரப்பினராக சேர்த்தது தவறு என்று சொன்னால் சரியில்லை. உங்கள் அப்பாவிற்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரியாக சொல்ல முடியவில்லை. தோராயமாக சுமார் **65** ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும். உங்கள் அப்பாவிற்கு திருமணம் நடைபெற்றவுடன் தனிக்குடித்தனம் சென்று விட்டார் என்றால் வசதி வாய்ப்பு இல்லை என்பதாலும் குறைவாக இருந்ததாலும் பக்கத்து தெருவில் பார்த்து தனி குடித்தினம் வைத்து விட்டார்கள். உங்கள் சித்தப்பா ராஜகோபால் தான் கடைசி வரை இருந்து நல்லது கெட்டதுகளை பார்த்தார் என்றால் சரியில்லை. உங்கள் அப்பா தனி குடித்தனம் சென்ற பிறகு **<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 24.06.2025

**அசல் வழக்கு எண். 154/2009**

**வா.சா.** 1. – **ஜானகிராமன் , த/பெ.வாசுதேவன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

தற்போது நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் என்றால் நான் வேளச்சேரியில் வசிக்கிறேன் பழைய எண் **26,** புதிய எண் **6,** நேரு தெரு**,** ராஜீவ் காந்தி நகர் வேளச்சேரி**,** சென்னை **42** இல் வசித்து வருகிறேன். உங்கள் தாத்தா ராகவபிள்ளை எப்பொழுது இறந்தார் என்றால் **2003**இல் இறந்தார். அவருக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் இரண்டு மகன்கள்

மற்றும் இரண்டு மகள்கள் ஆவார் அவர்கள் முறையே வாசுதேவன், செல்லம்மாள், ராஜகோபால், முனியம்மாள் ஆகிய நான்கு பிள்ளைகள் ஆவார்கள். உங்கள் தாத்தா ராகவ பிள்ளை இறக்கும் பொழுது நீங்கள் வேளச்சேரி முகவரியில் தான் இருந்தோம் உங்கள் தாயார் பெயர் என்ன என்றால் பட்டம்மாள் ஆவார். இந்த வழக்கு யார் தாக்கல் செய்தது என்றால் நானும் என் அம்மாவும் மூத்த சகோதரியும் சேர்ந்து தாக்கல் செய்தோம். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் என்னுடைய தாத்தா சொத்தில் என் அப்பாவிற்கு வர வேண்டிய பாகம் எங்களுக்கு தேவைப்படுகிறது ஆகவே பாகப்பிரிவினை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.நீங்கள் நீங்கள் எவ்வளவு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என் தாத்தாவிற்கு நான்கு வாரிசுகள். என் அப்பாவிற்கு சேர வேண்டிய நாலில் ஒரு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் இருங்காட்டு கோட்டை மற்றும் பென்னலூர் என்ற கிராமத்தில் உள்ளது. எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு பரப்பளவு சொத்து உள்ளது தெரியுமா என்றால் அந்த விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேன் என்னால் தற்பொழுது குறிப்பிட்டு சொல்ல முடியாது. உங்கள் தாத்தா ராகவப்பிள்ளை வழக்கு சொத்தினை சுயமாக சம்பாதித்து வாங்கியது என்றால் சரியில்லை.உங்கள் தாத்தா ராகவ பிள்ளை இறந்த பொழுது அப்பாவிற்கு என்ன வயது என்றால் தாத்தா இறப்பதற்கு முன்பாகவே அப்பா இறந்து விட்டார். உங்கள் அப்பா இறக்கும்பொழுது அவருடைய வயது என்ன என்றால் சுமார் **50** இருக்கும். உங்கள் தாத்தாவின் மனைவி அலமேலு உயிருடன் உள்ளாரா என்றால் அவர் இறந்து விட்டார். அலமேலு எப்பொழுது இறந்தார் என்றால் எங்கள் தாத்தா இறந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் இறந்து விட்டார். வழக்கு தாக்கல் செய்யும் பொழுது நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்களா அல்லது வேலைக்கு சென்று கொண்டிருந்தீர்களா என்று நான் வேலைக்கு தான் சென்று கொண்டிருந்தேன். வழக்கில் சொல்லிய சொத்துக்கள் தவிர உங்கள் தாத்தா ராகவா பிள்ளைக்கு வேறு ஏதேனும் சொத்துக்கள் உள்ளதா என்றால் முன்பு இருந்தது ஆனால் அவர் இறக்கும்போது அந்த சொத்துக்கள் அவர் பெயரில் இல்லை. சொத்துக்கள் இருந்ததாக சொல்கிறீர்கள் அது எங்கு இருந்தது சொல்ல முடியுமா என்றால் அது திருப்பாச்சூர் என்ற கிராமத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்தது. இந்த வழக்கில் அந்த சொத்தைப்பற்றி சொல்ல முடியவில்லை என்றால் அவருடைய பெயரில் அந்த சொத்து தற்போது இல்லை என்பதால் வழக்கில் சொல்லவில்லை. தாத்தா கையொப்பம் போடுவாரா அல்லது கைநாட்டு வைப்பாரா என்றால் கைநாட்டு தான் வைப்பார். தாத்தா உயிருடன் இருக்கும் போது அடிக்கடி சென்று பார்ப்பீர்களா என்றால் அடிக்கடி சென்று பார்ப்போம் அவரும் வருவார். தாத்தா இறக்கும்போது நீங்கள் உடன் இல்லை என்றால் அந்த நேரத்தில் இல்லை. தாத்தா இறக்கும் பொழுது எங்கு இருந்தீர்கள் என்றால் வேளச்சேரி முகவரியில் தான் இருந்தோம். உங்கள்

தாத்தா இறந்தபோது அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் **85** வயது இருக்கும். இறக்கும் வரை நினைவுடன் தான் இருந்தார் என்றால் கொஞ்சம் உடம்பு சரியில்லாமல் இருந்தார். காலையில் ஒரு மாதிரியும் சாயந்திரம் ஒரு மாதிரியும் இருப்பார். நீங்கள் அடிக்கடி சென்று பார்த்ததாக கூறுகிறீர்கள் அவருக்கு வைத்தியம் பார்த்தீர்களா என்றால் அழைத்துச் சென்றுள்ளேன். உங்கள் அம்மா பட்டம்மாளை கூட்டு குடும்ப சொத்தில் ஒரு தரப்பினராக சேர்த்தது தவறு என்று சொன்னால் சரியில்லை. உங்கள் அப்பாவிற்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரியாக சொல்ல முடியவில்லை. தோராயமாக சுமார் **65** ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும். உங்கள் அப்பாவிற்கு திருமணம் நடைபெற்றவுடன் தனிக்குடித்தனம் சென்று விட்டார் என்றால் வசதி வாய்ப்பு இல்லை என்பதாலும் குறைவாக இருந்ததாலும் பக்கத்து தெருவில் பார்த்து தனி குடித்தனம் வைத்து விட்டார்கள். உங்கள் சித்தப்பா ராஜகோபால் தான் கடைசி வரை இருந்து நல்லது கெட்டதுகளை பார்த்தார் என்றால் சரியில்லை. உங்கள் அப்பா தனி குடித்தனம் சென்ற பிறகு சொத்து வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது சேர்க்கத் தேவையில்லை என்பதால் சேர்க்கவில்லை. உங்கள் தாத்தா அவரை உங்கள் சித்தப்பா ராஜகோபால் கவனித்து வந்ததால் அவர் பேரில் சில சொத்துக்களை எழுதி வாங்கி கொண்டார் என்றால் சரியில்லை இதற்கு முன்பாகவே என் தாத்தாவின் சொத்தை சித்தப்பா அவர் பேரில் எழுதி வாங்கிக் கொண்டார். பென்னலூர் கிராம சொத்தை என் சித்தப்பா என் தாத்தாவிடம் இருந்து வாங்கிக் கொண்டார். அந்த சொத்து விவரங்களை இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா இறக்கும் சமயத்தில் அவருடைய பெயரில் அந்த சொத்து இல்லை என்பதால் அந்த சொத்தினை வழக்கில் சேர்க்கவில்லை. உங்கள் தாத்தா ராகவபிள்ளை வைத்திய செலவுக்காகவும் பராமரிப்பு செலவிற்காகவும் செலவுகள் ஏற்பட்டது. உங்கள் சித்தப்பா ராஜகோபால் தான் உடனிருந்து உங்கள் தாத்தாவை கவனித்துக் கொண்டார் அந்த விசுவாசத்தின் அடிப்படையில் சில சொத்துக்களை இராஜகோபால் சித்தப்பா பெயரில் உயில் எழுதி வைத்தார் என்றால் சரியில்லை. ராஜகோபாலுக்கு உயில் வாயிலாக கிடைத்த சொத்துக்களை தான் பிரதிவாதிகள் நான்கு மற்றும் ஐந்து ஆகியோர் கிரையம் வாங்கினார்கள் என்றால் உயிலே எழுதப்படவில்லை. உங்கள் தாத்தா உங்கள் சித்தப்பாவிற்கு எழுதி வைத்த உயில் நீதிமன்றத்தில் தாக்கல் ஆகி உள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அந்த உயிலை நான் பார்த்துள்ளேன் அது தவறு என்று ஏற்கனவே நான் சொல்லி உள்ளேன். உயில் மூலமாக கிடைத்த சொத்து பொட்டல் காடு வருவாய் இல்லாத சொத்து அந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் கொஞ்ச காலம் நன்றாக விளைந்தது தற்போது விளையாமல் இருக்கிறது தரிசாக உள்ளது. இந்த வழக்கில் எத்தனை சதவீதம் பாகம்

வேண்டும் என்று குறிப்பாக கோரவில்லை என்றால் கேட்டுள்ளேன் நான்கில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன். நான்கு மற்றும் ஐந்து பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்தது தவறு என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே நீங்கள் கூறிய பரிகாரம் வழங்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Additional Subordinate Judge,
Kancheepuram. சொத்து

வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது சேர்க்கத் தேவையில்லை என்பதால் சேர்க்கவில்லை. உங்கள் தாத்தா அவரை உங்கள் சித்தப்பா ராஜகோபால் கவனித்து வந்ததால் அவர் பேரில் சில சொத்துக்களை எழுதி வாங்கி கொண்டார் என்றால் சரியில்லை இதற்கு முன்பாகவே என் தாத்தாவின் சொத்தை சித்தப்பா அவர் பேரில் எழுதி வாங்கிக் கொண்டார். பென்னலூர் கிராம சொத்தை என் சித்தப்பா என் தாத்தாவிடம் இருந்து வாங்கிக் கொண்டார். அந்த சொத்து விவரங்களை இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தா இறக்கும் சமயத்தில் அவருடைய பெயரில் அந்த சொத்து இல்லை என்பதால் அந்த சொத்தினை வழக்கில் சேர்க்கவில்லை. உங்கள் தாத்தா ராகவபிள்ளை வைத்திய செலவுக்காகவும் பராமரிப்பு செலவிற்காகவும் செலவுகள் ஏற்பட்டது. உங்கள் சித்தப்பா ராஜகோபால் தான் உடனிருந்து உங்கள் தாத்தாவை கவனித்துக் கொண்டார் அந்த விசுவாசத்தின் அடிப்படையில் சில சொத்துக்களை இராஜகோபால் சித்தப்பா பெயரில் உயில் எழுதி வைத்தார் என்றால் சரியில்லை. ராஜகோபாலுக்கு உயில் வாயிலாக கிடைத்த சொத்துக்களை தான் பிரதிவாதிகள் நான்கு மற்றும் ஐந்து ஆகியோர் கிரையம் வாங்கினார்கள் என்றால் உயிலே எழுதப்படவில்லை. உங்கள் தாத்தா உங்கள் சித்தப்பாவிற்கு எழுதி வைத்த உயில் நீதிமன்றத்தில் தாக்கல் ஆகி உள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அந்த உயிலை நான் பார்த்துள்ளேன் அது தவறு என்று ஏற்கனவே நான் சொல்லி உள்ளேன். உயில் மூலமாக கிடைத்த சொத்து பொட்டல் காடு வருவாய் இல்லாத சொத்து அந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் கொஞ்ச காலம் நன்றாக விளைந்தது தற்போது விளையாமல் இருக்கிறது தரிசாக உள்ளது. இந்த வழக்கில் எத்தனை சதவீதம் பாகம்

வேண்டும் என்று குறிப்பாக கோரவில்லை என்றால் கேட்டுள்ளேன் நான்கில் ஒரு பாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன். நான்கு மற்றும் ஐந்து பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்தது தவறு என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே நீங்கள் கூறிய பரிகாரம் வழங்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.